# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2138 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

சட்ட அலுவலர் (நிறைவேற்று வகுதி III தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத் துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கூட்டுறவுத் திணைக்களத்தில் நிலவும் நிறைவேற்று சட்ட அலுவலரின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **இணைத்துக்கொள்ளும் முறை**.- விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின் போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பெறுபேற்றுக்கமையவும் கீழ்வரும் புள்ளி வழங்கும் முறைமையின் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் இப்பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளி விபர நடைமுறையின் பிரகாரம் (இலக்கம் 06 இல் குறிப்பிட்டபடி) நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான தகைமைகள்.- உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட சட்டத்தரணியாக இருத்தல்.

(ii) அனுபவம்.

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட பின் மூன்று வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்து தொழில் அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும். (தொடர்ந்து வேலை செய்த அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் அனுபவம் பெறப்பட்ட காலம் மற்றும் தினத்தினை இறப்பர் இலட்சினை பொறிக்கப்பட்ட விடயங்களுடன் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனத்தில் சட்டத்துறையில் குறைந்தது 03 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்ததுடன் கீழ்வரும் கடமைகளில் அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) வழக்கு சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளில் சட்டமா அதிபருடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருத்தல்.

(2) ஒப்பந்தம் சம்பந்தமான சட்ட விடயங்களில் ஈடுபட்டிருத்தல்.

(3) உரிய கட்டளைச்சட்டம் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டிருத்தல்.

(4) சட்டம் தொடர்பான சுற்று நிரூபம் மற்றும் சட்டவிதிக் கோவை சட்ட ஆவணங்களில் போதிய அறிவைப் பெற்றிருத்தல்.

(5) பல்வேறுபட்ட சட்ட நிறுவனங்களுடன் சட்டம் தொடர்பான காரியங்களில் ஈடுபட்டிருத்தல்.

(இந்த விபரங்கள் அனைத்தும் திணைக்கள செயலாளரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

(iii) உடற் தகைமை.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவைபுரியக் கூடியதாயிருப்பதுடன் போதிய உடற் தகுதி மற்றும் உளத் தகுதியையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iv) ஏனைய தகைமைகள் :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்ப முடிவுத்திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு தேவையான தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கு அமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதும் அரசாங்கத்தின் எதிர்காலத்தில் உள்ளடக்கப்படும் கொள்கைகளுக்கு கீழ் உள்ளடக்கப்படுவீர். நீங்கள் விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் உதவுதொகைக்கேற்ப தாங்கள் பங்களிப்பு செலுத்துதல் வேண்டும் ;

இந்நியமனமானது மூன்று வருட தகுதி காண் கால அடிப்படையின் கீழ் உள்ளடக்கப்படும். இம்மூன்று வருட காலப்பகுதிக்குள் சேவைப் பிரமாண நியதிகளுக்கேற்ப தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01- 2014 இற்கு அமைவாக நியமனம் பெற்று 5 வருடம் முடிவடைவதற்கு முன்னர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் மொழிக்கு மேலதிகமாக அரச கரும மொழி ஒன்றில் தேர்ச்சி பெற வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெறல் வேண்டும் ;

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவை நடைமுறை விதிக்கோவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் திணைக்களத்திற்கான நியதிகளுக்கமைய இந்நியமனம் உள்ளடக்கப்படும்.

4. **வயது எல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பளத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூபா 47,615-10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895 மாதாந்த சம்பளத்திற்கு உரித்தாவர் (2016.02.25) தினத்திலான அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றுநிரூபம் இலக்கம் எஸ் எல் 1-2016 என்ற சம்பள வகுதி உப அட்டவணை II இல் குறிப்பிட்டபடி உங்களது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

6. நேர்முகப் பரீட்சையின் போது வழங்கப்படும் புள்ளி விதிமுறை கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இல. | விடயம் | மொத்த புள்ளி | குறைவான புள்ளி |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித்தகைமை** | | 25 |
| | பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் பட்டபின்படிப்பு பட்டதாரி | 25 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட துறைசார் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப்பின்படிப்பு சட்ட டிப்ளோமா வருடத்திற்குக் குறையாத | 20 | |
| | பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் சம்பந்தமான பட்டம் | | |
| | * முதலாம் வகுப்பில் சித்தியடைந்திருந்தால் | | |
| | * இரண்டாம் வகுப்பிற்கு மேலதிகமாக சித்தியடைந்திருந்தால் | | |
| | * இரண்டாம் வகுப்பிற்கு குறைவாக சித்தியடைந்திருந்தால் | 15 | |
| | சட்டக்கல்லூரியில் இறுதி ஆண்டில் முதலாவது வகுப்பில் சித்தி யடைந்திருப்பின் | 10<br>05 | |
| | சட்டக்கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாவது வகுப்பில் சித்தி யடைந்திருப்பின் | 10 | |
| | **உதாரணம்:** சிறப்பு சித்தியின் மூலம் இறுதிப் பரீட்சை சித்தி யடைந்திருப்பின் 5 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். | 05 | |
| | குறைந்தளவு ஒரு தகைமைக்கு மாத்திரம் வழங்கப்படும் மேலதிக தொழில்சார் தகைமைகள் | | |
| | 1. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட துறைசார் சம்பந்தமாக ஒரு வருடத்திற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட டிப்ளோமா (ஒரு டிப்ளோமாவிற்கு 10 புள்ளி வீதம்) | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, செப்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

| தொடர் இல. | விடயம் | மொத்த புள்ளி | குறைவான புள்ளி |
|---|---|---|---|
| 02 | I. **மேலதிக அனுபவம்** | | 35 |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் கிடைக்கப்பெற்ற துறைசார் சம்பந்தமான 1 வருடத்திற்கு மேலதிகமாக உள்ள டிப்ளோமா (ஒரு டிப்ளோமாவிற்கு 10 புள்ளிகள் வீதம்) | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் கிடைக்கப்பெற்ற துறைசார் சம்பந்தமான 6 மாதத்திற்கு மேலதிகமாக அல்லது 1 வருடத்திற்குக் குறைவாக கிடைக்கப்பெற்ற டிப்ளோமா சம்பந்தமாக ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளி | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற துறைசார் சம்பந்தமான 3 மாதத்திற்கு மேலதிகமாகவும் 6 மாதத்திற்கு குறைவாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் சம்பந்தமாக (ஒரு பாடத்திற்கு புள்ளி 3 வீதம்) | | |
| | இலக்கம் 1 கீழ் வழங்கப்பட்ட சான்றிதழுக்கான புள்ளிக்கு மேலதிகமாக | | |
| | II. **மேலதிக அனுபவம்** | | |
| | சட்டத்தரணியாக அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்திருப்பின் | 25 | |
| | 1. ஒரு வருடத்திற்கு 5 வீதம் குறந்தது 25<br>2. ஆறு மாதத்திற்கு மேலதிகமாக 1 வருடத்திற்கு குறைவாக புள்ளி 02 | | |
| | (மூன்று வருட காலப்பகுதியில் சட்டத்தரணியாக கடமைபுரிந்திருப்பின் அடிப்படைத் தகைமையாகக் கருதப்படும்) | | |
| | (20 வருடத்திற்கு குறையாமல் சேவை செய்திருக்கும் சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதியாக பெற்ற சான்றிதழ் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.) | 25 | |
| | மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமையுடைய அரசாங்க அலுவலர் அல்லது தனியார் துறை அலுவலர் நிறுவனத்தின் தலைவரின் மூலமாக மேலதிகமான அனுபவத்தினை சட்டரீதியாக உறுதிப்படுத்துதல் வேண்டும். | | |
| 03 | **தொழில்நுட்ப ரீதியான தகைமைகள்**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்டிருப்பின் | | 10 |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டம் அல்லது 1500 மணித்தியாலம் பூர்த்தி செய்யப்பட்ட பாடம் | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான சான்றிதழ் | 07 | |
| | மாதம் 06 மணித்தியாலம் 720 | 05 | |
| | மாதம் 03 மணித்தியாலம் 360 | 03 | |
| | (உரிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 04 | **மொழித் தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழி மூலம் கற்ற பட்டப்பின் படிப்பு நீதித்துறையில் பட்டதாரி | 15 | |
| | (அனைத்துப் பரீட்சை வினாத்தாள்கள் கேள்விகளுக்கும் ஆங்கில மொழி மூலமான பதில் அளிக்கப்படல் வேண்டும்) | | |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி சான்றிதழ் சம்பந்தமான பாடத்திட்டம் | 10<br>07<br>05 | |
| | மாதம் 06 மணித்தியாலம் 720<br>மாதம் 03 மணித்தியாலம் 360<br>(தகுந்த தகைமைகளுக்கு மாத்திரம் உரிய புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையின் போது இருக்க வேண்டிய திறமைகள்** | | 15 |
| | (i) பொது அறிவும் நுண்ணறிவும் | 05 | |
| | (ii) சட்டத்துறை சம்பந்தமான தற்கால அறிவு | 05 | |
| | (iii) நன்றாக பேச்சாற்றல் திறமை கொண்டிருத்தல் | 05 | |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.**- கோரப்பட்ட விடயங்களுக்கேற்ற வகையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது கோரப்படும் அனைத்து விண்ணப்பதாரிகளும் மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களின் மூலப்பிரதியும் நகல்களையும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்;

நேர்முகப்பரீட்சையின் போது தங்களுடைய ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல் :**

(i) விண்ணப்பப்படிவம் 2019.09.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கங்களின் பதிவாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,
இலக்கம் 330,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

(ii) அனுப்பப்படவேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பப்படிவத்தினை ஏ4 அளவிலான கடதாசியில் முதல் பக்கத்தில் இலக்கம் 1.1 இலிருந்து 5.1 வரையும், இரண்டாம் பக்கத்தில் 5.2 இலிருந்து 7 வரையும், மூன்றாம் பக்கத்தில் 8 இலிருந்து 9 வரையும் அமையுமாறு தயாரித்து தங்களுடைய சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவி" என குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர் /சமாதான நீதவான்/சட்டத்தரணி/நொத்தாரிசு/முப்படை அதிகாரி அல்லது மாதாந்தம் ரூபா 47,615.00 அல்லது அதற்கு மேலதிகமாக இணைந்த சேவையில் அல்லது மாகாண சேவையில் நிரந்தர பதவி நிலையில் உள்ள அலுவலரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் தமது விண்ணப்பப்படிவங்களை தங்களது நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போதல் காலம் தாழ்த்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் சார்பாக எந்தவித முறைப்பாட்டினையும் மேற்கொள்ள முடியாது.

09. **பிழையான தகவல்களை சமர்ப்பித்தல்.**- உங்களால் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யென இணைத்துக் கொள்வதற்கு முன்னராக தெரியுமிடத்து உங்களுடைய தெரிவு நிராகரிக்கப்படும். நியமனம் பெற்ற பிறகு வழங்கப்பட்ட தகவல்கள் பிழையென கண்டுப்பிடிக்கப்பட்டால் நியமனத்தில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது நிரப்பப்படாமல் இருப்பதற்கான முழு அதிகாரமும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினை சாரும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாவது வேறுபாடு காணப்படின் (ஒவ்வாத நிலை) இங்கு சிங்கள மொழி மூலமான மூலத்தினை இறுதி தீர்மானமாகக் கொள்ளல் வேண்டும்.

12. 2018.09.20 அன்றைய தினம் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கேற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

13. இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அல்லது இணைத்துக் கொள்ளும் நடைமுறையில் ஏதாவது சிக்கல் நிலை ஏற்படின் அது சம்பந்தமாக இறுதி தீர்மானம் எடுப்பது அரசாங்க சேவை ஆணையாளரின் பொருப்பாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக,

செயலாளர்,
கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட
காலமாக இடம்பெயர்ந்த நபர்களின்
மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி
தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி

அமைச்சு.
2019, ஆவணி 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

**சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

அலுவலக பாவனைக்கு ☐

விண்ணப்பிக்கும் மொழி
சிங்களம் 2/ தமிழ் 3/ ஆங்கிலம் 4 ☐

(மொழி மூலத்தை மாற்ற முடியாது)

1.0 1.1 முழுப்பெயர் (திரு./ திருமதி/ செல்வி) (சிங்களம்/ தமிழ்) :.................................................
.................................................
1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) .................................................
.................................................
1.3 முதலெத்துக்களுடன் பெயர் (சிங்களம்/ தமிழ்) .................................................
.................................................
..........................
1.4 முதலெத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) .................................................
.................................................

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழ்) :.................................................
.................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :.................................................
.................................................

2.3 தொலைபேசி இலக்கம் :

3.0 3.1 பால் : ஆண் - 0 / பெண் - 1 ☐

3.2 விவாகமானவரா: விவாகமானவர் - 1 / விவாகமாகாதவர் - 2 ☐

3.3 பிறந்த தினம் : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 ...... 2019 அன்று வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கல்வித் தகைமை :

கல்வித்தகைமை பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம்    பெற்றுக்கொள்ளப்பட்ட தினம்
............................................................ ............................................................
............................................................ ............................................................

சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட திகதி : ......................

4.2 பந்தி 6 இல் குறிப்பிட்டவாறு கல்வித்தகைமை : ............................................................
............................................................

4.3 மேலதிக கல்வித்தகைமை : ............................................................
............................................................

4.4 மேலதிக தொழில்சார் அனுபவம் : ............................................................
............................................................

4.5 மேலதிக தகைமை : ............................................................
............................................................

4.6 மொழித்தேர்ச்சி : ............................................................
............................................................

4.7 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு : ............................................................
............................................................

5.0 தாங்கள் எப்பொழுதாவது ஏதேனும் குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா? உரிய கூட்டில் புள்ளியிடவும்

ஆம் ☐ இல்லை ☐

6.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை
இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானது எனவும் பிழையற்றது எனவும் உறுதியளிக்கின்றேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் பிழையானவை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும் நியமனத்தின் பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

.........................
திகதி    விண்ணப்பதாரியின் கையொப்பம்

7.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
இந்த விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் ............................................................
.............
(முழுப்பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட ரீதியில் தெரியும் எனவும்
............................................................ ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :...................
உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :.....................
பதவி :.....................
முகவரி :...................

8.0 திணைக்கள தலைவரின் சான்றிதழ் (அரசாங்க / மாகாண அரசாங்க / கூட்டுத்தாபன சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

இந்த விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் ............................................................ இந்த அமைச்சில் திணைக்களத்தில் நிறுவனத்தில் .................................................. ஆக பதவி வகிப்பவர் என அவருடைய விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்துகின்றேன். இந்த பதவி நிமித்தம் அவர் தெரிவு செய்யப்படுமிடத்து. அவரை இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

நிறுவனத் தலைவரின் கையொப்பம் :................
திகதி :.................
பெயர் :...............
பதவி :.................
முகவரி :.................
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

08-823

---

திருத்தம்

**பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியினை திருத்தஞ் செய்தல் - திருகோணமலை மாவட்டம்**

2116 ஆம் இலக்கம் மற்றும் 2019.03.22 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 03-916 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியினை 2019.09.23 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை. |

08-1096

---

திருத்தம்

**பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியினை திருத்தஞ் செய்தல் - திருகோணமலை மாவட்டம்**

2116 ஆம் இலக்கம் மற்றும் 2019.03.22 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 03-914 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியினை 2019.09.23 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | குச்சவெளி | குச்சவெளி பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை. |
| திருகோணமலை | மூதூர் | தோப்பூர் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை. |

08-1097

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை நிரந்தர வான்படை**

**பயிலிளவல் ஆண் /பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்**

1. இலங்கை நிரந்தர வான்படையில் கீழ் வரும் பிரிவுகளில் பயிலிளவில் ஆண் / பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்/பெண்)
(ஆ) தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)
(இ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)
(ஈ) உபகரணப் பிரிவு (ஆண்/பெண்)
(உ) நிருவாகப் பிரிவு (ஆண்)
(ஊ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்)
(எ) வான் வழி நடத்துநர் பிரிவு (வான் வழி கட்டுப்பாடு) (ஆண்)
(ஏ) பொலிஸ் பிரிவு (ஆண்/பெண்)
(ஐ) தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைக் கல்வித்தகைமை**

**பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமை**

(அ) குறைந்தபட்சம் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் இல்லாமல்)

**பட்டப்படிப்பு கல்வித்தகைமை**

(ஆ) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எந்தப் பிரிவிலாவது ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பல்கலைக்கழக அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

3. **விஷேட தகைமை**

BSc (Aviation Studies) **பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவ பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)**

(அ) **பொதுக்கடமை விமான ஓட்டுநர் /வான் வழி நடத்துநர் பிரிவுகள் (வான் வழிக் கட்டுப்பாடு)**

பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக / உயிரியல் /தொழில்நுட்பப் பிரிவுகளில் (தேவையைப் பொறுத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (Aeronautical) /இலத்திரனியல் பொறியியல் பிரிவு**

பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல்) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) **உபகரணப் பிரிவு / நிருவாகப் பிரிவு/நிருவாக ரெஜிமன்ட் /பொலிஸ் பிரிவு பிரிவுகள்**

பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக / உயிரியல் / வர்த்தக/ தொழில்நுட்ப/ கலைப் பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) **தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக பிரிவில் / தொழில்நுட்ப பிரிவில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக சித்தி பெற்று இருப்பதுடன் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) **விஷேட குறிப்பு**
Pearson / Edexcel /சர்வதேச சாதாரண /உயர் தர மற்றும் GCSE, GCE மற்றும் கேம்பிட்ஜ் பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகள் அதற்குச் சமனான தகைமை என தங்களால் நிரூபிக்கப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. **வேறு தகைமைகள்.**- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்குப் பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாகப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

அ. தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ வயது :- 2019, திசெம்பர் 15 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

இ. உயரம் :- ஆண் சென்றிமீட்டர் 167.5 (5 அடி 6 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும்.
பெண் சென்றிமீட்டர் 162.5 (5 அடி 4 அங்குலத்திற்கு)குறையாதிருத்தல் வேண்டும்.

ஈ. உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி .கி)}}{\text{உயரம் (மீ)}^2}$$

உ. மார்பு :- ஆண் -32" (குறைந்தது)

ஊ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

எ. தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி மற்றும் கண் வில்லை பயன்படுத்தப்படாமல் )

ஏ. குடியியல் நிலை :- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணை பெற்ற தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாடைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

7. தேவையான தகைமை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படைத் தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

8. **சேவை நிபந்தனைகள்** :-

அ. தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்று அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படைப் பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொறுத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றைப் பெறுவர்.

ஆ. பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு பயிலிளவல் பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகால வரையில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உப்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 28 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். குடும்ப நல பரீட்சைக்கும் பின்னர் இறுதி நேர்முகப்பரீட்சைக்கும் சமுகமளிக்க வேண்டும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

ஔ. எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஅ. எல்லா அலுவலருக்கும் வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

10. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.**-

அ. தற்போதிலிருந்து 2020 ஆம் வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு மேற்குறிப்பிட்டவாறு இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு : 2019 இல் இருந்து கிடைக்கப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (ஆண்டொன்றுக்கு)

| வருடம் / நிலை | 2020 (வருடத்திற்கு) (ரூபா) | திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் 2019 (வருடத்திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| பயிலிளவல் | 348,372.00 | - | ரூபா 388,560.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ நுழைவு) | 415,308.00 | - | ரூபா 463,260.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ அல்லாத நுழைவு) | 450,828.00 | - | ரூபா 502,860.00 |
| ப்ளையின் ஓபிசர் | 512,148.00 | - | ரூபா 571,380.00-(30×16,020) =ரூபா 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினனன்ட் | 598,332.00 | - | ரூபா 667,500.00 -(24× 16,020)=ரூபா 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 655,788.00 | - | ரூபா 731,580.00 -(22× 16,020)=ரூபா 1,084,020.00 |

ஆ. **ஏனைய கொடுப்பனவுகள்**

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.00.

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி: மாதமொன்றுக்கு ரூபா 620.00.

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00 (மாதமொன்றுக்கு).

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,100.00 (ஒவ்வொறு வேலை நாட்களுக்கும் ரூபா 100.00 வீதமும் கொடுப்பனவு வழங்கப்படும்.).

(6) இடைக்கால கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.00.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255.00).

(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்).

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 24,005.47 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 774.37வீதம்).

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) ஆண்டொன்டுக்கு மூன்று சோடி விடுமுறைப் புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்).

(12) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(15) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.பொ.ச இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஒபீசர் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600.00 இருந்து ரூபா 8,500.00 - வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(18) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் ரூபா 15,000.00 (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்).

11. **ஓய்வூதியங்கள் / பணிக்கொடைகள்.**- காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான் படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், தபுதாரர், அநாதைகள் (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, தபுதாரர், அநாதை (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளவாறாகும்.

12. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** -

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடிய வரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2019, செத்தெம்பர் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், தொழிற்துறை பயிற்சி பாடசாலை, இலங்கை விமானப்படை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவியல் ஆண் /பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம் . . . . . . . . . . . . . பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவு திகதியில் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

ஆ. அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரிகளது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின் /குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. தேர்வுநாடி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போது பின்வருவனற்றின் மூலப் பிரதிகளை மற்றும் பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(2) தேசிய ஆளடையாள அட்டையின் மூலப் பிரதி மற்றும் பிரதி;

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் பிரதி;

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி;

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பத்தாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்;

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்களின். மூலப் பிரதி மற்றும் பிரதி;

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக்;

(8) வர்ண புகைப்படம் 2 × 2 ½ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப்பட்ட.

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

உ. ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

13. விண்ணப்பத்தில் ஏதேனும் பிழையான தகவல் காணப்படின் அத்தகைய பிழை அல்லது கூற்று தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

14. **தேர்ந்தெடுத்தல் நேர்முகப்பரீட்சை முதலியன :**

அ. மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையோடு பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவநரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

ஆ. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

இ. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து எழுத்துப்பரீட்சை அல்லது செயன்முறை பரீட்சை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு சமுகமளிக்கும் படி தேவைப்படுத்தப்படுவர்.

ஈ. இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதணைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

உ. ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்பும் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

ஊ. சேர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வு நாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டி. எல். எஸ். டயஸ்,
RSP and three Bars, VSV, USP, MSc
(Def & Strat Stu), ndc, psc,
எயர் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமைக் அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 02.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

அலுவலக உபயோகத்துக்காக

**இலங்கை நிரந்தர வான்படையில் ............................ பிரிவில் ஆண் /பெண் பயிலிளவல் அலுவலருக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம்: ........................................................................................................................
(இலங்கை பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டைப்படி) :...................................................................
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்::-.........................................................................
4. நிரந்தர முகவரி:-..........................................................................................................
5. தற்போதைய அஞ்சல் முகவரி :- ...................................................................................
6. பிறந்த திகதி :- ...............................................................................................................
வயது :- (2019, திசெம்பர் 15 ஆந் திகதிக்கு) வருடங்கள்: . . . . .. மாதங்கள்: . . . நாட்கள்: . . .
7. உயரம் : .............. செ. மீ. (.............. அடி ......................அங்குலம்)
8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் : ................................................
9. மாவட்டம் : ..................................................................................................................
10. தேர்தற் தொகுதி :-.........................................................................................................
11. கிராம அலுவலர் பிரிவு:- ...........................................................................................
12. தொலைபேசி இலக்கம்.:- ..............................................................................................
13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா:- . ...................................................
14. பால் :- ....................................................
15. பாடசாலை பற்றிய விபரங்கள்: ...................................................................................
16. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு மற்றும் சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) | |
|---|---|---|---|---|
| | க. பொ. த. (சா/த) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு மற்றும் சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) | |
|---|---|---|---|---|
| | க.பொ.த (உ/த) பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக உறுதிப்படுத்தல்<br>Yes ☐ No ☐ | | | |
| | | | | |
| | | | | |
| | | | பொது ஆங்கிலம் | |
| | | | பொதுப் பரீட்சை | |
| | ஏனைய தகைமைகள் | | | |

17. பாடசாலை / பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| முழுப்பெயர் | தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் : ......................................

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ......................................
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) : ......................................

22. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ......................................

23. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ......................................

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில், கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ......................................

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் எனது அறிவிக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

.................. ..................................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

28. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

அ. இலங்கை வான் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ......... ............................ இவருக்கு நான் பெற்றோர்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன்.

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வுநாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக்கு காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும்.

.....................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

தேதி : ..........................................................................................................
பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ..................................................................
முகவரி : .......................................................................................................

..................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

தேதி :- ..........................................................................................................
பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ..................................................................
முகவரி : .......................................................................................................

.....................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

தேதி : ..........................................................................................................
பெயர் (தெளிவான எழுத்துக்களில்): ..................................................................
முகவரி :.......................................................................................................

8-1018/1

---

**இலங்கை வான்படை**

**அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்**

1. இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் ஆண் / பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்காணும் பிரிவுகளில் உள்ளன.

அ. தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு
ஆ. இலத்திரனியல் பொறியியல் பிரிவு
இ. உபகரணப் பிரிவு
ஈ. வைத்தியப் பிரிவு
உ. பல்வைத்தியப் பிரிவு
ஊ. பரிபாலன நீதிப் பிரிவு
எ. பரிபாலன கல்விப் பிரிவு
ஏ. தகவல் தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைக் கல்வித்தகைமை**

அ. குறைந்த பட்சம் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு திறமைச்சித்திகளும் சிங்களம் / தமிழ் மொழிக்கு சாதாரண சித்தியும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் கட்டாயமற்ற பாடங்கள் தவிர)

ஆ. குறைந்த பட்சம் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இ. Pearson/Edexcel / சர்வதேச சாதாரண/ உயர் தர மற்றும் GCSE, GCE கேம்பிரிட்ஜ் பரீட்சை பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகள் அதற்கு சமனான தகைமை என தங்களால் நிரூபிக்கப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படும் .

**தொழிற்துறை தகைமை /கல்வித்தகைமை**

அ. **தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

(1) ***இரசாயன பொறியியல் அதிகாரி (ஆண் ) (தொண்டர்)*** இரசாயன பொறியியல் Bsc பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும். Surface treatment தொடர்பாக 03 வருட அனுபவம் இருத்தல் அல்லது சமமான தகைமைகள் குறிப்பிட்ட துறையில் இருத்தல் வேண்டும்.

ஆ. **இலத்திரனியல் பொறியியல் பிரிவு**

***இலத்திரனியல் பொறியியல் அதிகாரி- ஆண் (நிரந்தர)*** இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் BSc பட்டம் அல்லது பௌதிக விஞ்ஞானம் (Major) உடன் இலத்திரனியல் / தொலைத்தொடர்பு பிரதான பாடமாக BSc பட்டம் அல்லது BSc பௌதிக விஞ்ஞானப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இருத்தல் வேண்டும். மொரட்டுவ பல்கலைகழகத்தில் பெற்ற (NDT) தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) பெற்றிருத்தல் வேண்டும். IESL நிலையத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

இ. **உபகரண பிரிவு**

(1) உபகரண அதிகாரி - ஆண் /பெண் ( நிரந்தர) உபகரண பிரிவில் பட்டச் சான்றிதல் இருத்தல் வேண்டும். அல்லது உபகரண பிரிவில் விசேட பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும். வணிகப் பிரிவில் பட்டச் சான்றிதல் இருத்தல் வேண்டும். முகாமைத்துவ மற்றும் நிதிப் பிரிவில் பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும் . சர்வதேச அல்லது தேசிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தினால் உபகரண முகாமைத்துவம் அல்லது வழங்குனர் தொடர்பான முகாமைத்துவம் அல்லது அதற்கு சமமான தகைமை இருத்தல் வேண்டும். முகாமைத்துவம் சம்பந்தமாக அதிகார அனுபவம் இருத்தல் வேண்டும்.

(2) உணவக முகாமையாளர் ஆண் ( நிரந்தர) ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா பட்டச் சான்றிதழ் அல்லது தேசிய / சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தில் விருந்தோம்பல் உபசரணை கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படை, இடை மற்றும் பயிற்சி பெற்றிருப்பதுடன் நட்சத்திர ஹோட்டலில் போசணைசாலையும் உணவு முகாமைத்துவம் சம்மந்தமாக 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஈ. **வைத்தியப் பிரிவு**

(1) வைத்திய அதிகாரி ஆண் / பெண் (நிரந்தர / தொண்டர்) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற MBBS பட்டம் அல்லது வைத்திய பட்டம் (இலங்கை) அல்லது சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்ற MBBS பட்டம் அதற்கு சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(2) மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)

(அ) MD (General/Medicine) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) மருத்துவ ஆலோசகர் சம்மந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(3) அறுவைச்சிகிச்சை ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)

(அ) MS (General Surgery) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) அறுவை சிகிச்சை சம்மந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(4) மயக்க மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)

(அ) MD (Anesthesiology) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) மயக்க மருத்துவ ஆலோசகர் சம்மந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(5) குழந்தை மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)

(அ) MD (Pediatric) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) குழந்தை மருத்துவம் சம்பந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(6) மகப்பேற்று மருத்துவ ஆலோசகர் - ஆண் /பெண் (தொண்டர்)

(அ) MS (Gynecology and Obstetrician) பட்டச் சான்றிதழுடன்

(ஆ) மகப்பேற்று சம்மந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : ஆலோசகர்கள் 2019, திசெம்பர் 15 ஆந் திகதிக்கு 40 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். எனினும், 2019, திசெம்பர் 15 ஆந் திகதியன்று 40 வயதிற்கு மேல் உள்ள ஆலோசகரர்களுக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் (விங்க் கமாண்டர் நிலை சம்மந்தமாக) அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

உ. பல்வைத்தியப் பிரிவு

(1) பல் அறுவை மருத்துவர்- ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்) BDS அல்லது அதற்கு சமனான தகைமையுடன் SLMC அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) பயிற்ச்சி பெறும் (Pre-Intern) வைத்தியர்- ஆண் / பெண் (நிரந்தர/ தொண்டர்) BDS அல்லது இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைகழகம் ஒன்றில் பெற்ற BDS (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 05 ஆண்டு தொண்டர் சேவை காலத்திற்குள் ERPM பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்தாரிகள் (5) வருட சேவைக்குபின் நிறுத்தப்படுவார்கள்.

ஊ. பரிபாலன நீதிப் பிரிவு

நீதி அதிகாரி - ஆண் (நிரந்தர) இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கரிஞராக இருத்தல் வேண்டும். வர்த்தக ஆவணங்களை தயாரித்தல், ஆவணங்களை கையாலுதல், நீதிமன்றத்தில் குற்ற விசாரணை, ஒழுக்கத்தை சீராக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

எ. பரிபாலன கல்விப் பிரிவு

(1) ஆங்கில மொழி விரிவுரையாளர் - ஆண் / பெண் (நிரந்தர/ தொண்டர்) தேசிய கல்வியற் கல்லூரியில் ஆங்கில மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தியாகி இருத்தல் அல்லது தேசியக் கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர்கலாசாலையில் 2 வருட ஆங்கில மொழி தொடர்பான கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகத்தால் ஆங்கிலத்தில் BA / BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமர்க MA/ Msc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் MA/ MSc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபம் இருத்தல் வேண்டும் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக BA / BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலத்தில் B.Ed அல்லது ஆங்கில மொழி மூலம் BA / BSc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபம் இருத்தல் வேண்டும்.

(3) பிரெஞ்சு மொழி /சீன மொழி விரிவுரையாளர் - ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்) தேசிய கல்வியற் கல்லூரியில் மொழி /சீன மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகிருத்தல் அல்லது தேசிய கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் கலாசாலையில் 2 வருட மொழி / சீன மொழி தொடர்பான கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகிருத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தால் ஆங்கிலத்தில் BA / BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது மொழி /சீன மொழி ஒரு பாடமாக MA/ Msc பட்டம் பெற்றிருத்தல் அல்லது மொழி /சீன மொழி மூலம் MA/ MSc பட்டம் பெற்றிருத்தலுடன் மொழி /சீன மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபம் இருத்தல் வேண்டும் அல்லது மொழி /சீன மொழி ஒரு பாடமாக BA / BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது மொழி /சீன மொழி B.Ed அல்லது மொழி /சீன மொழி மூலம் BA / BSc பட்டம் பெற்றிருத்தலுடன் மொழி /சீன மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபம் இருத்தல் வேண்டும் .

ஏ. தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு

(1) வலையமைப்பு பரிபாலகர் அதிகாரி ஆண் /பெண் (நிரந்தர)
கணினி பொறியியல் பிரிவில் BSc பட்டம் இருத்தல் வேண்டும். கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானம் தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc பட்டம் அல்லது HND தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது வலையமைப்பு பரிபாலகர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன்

(2) மென்பொருள் விருத்தியாளர் ஆண்/பெண் (நிரந்தர )

4 வருட BSc பொறியியல் பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது 3 வருட BSc பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது BSc பட்டத்துடன் கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா அல்லது மென்பொருள் விருத்தியாளருக்கு சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் ASP.NET மற்றும் C#.NET இனை பயன்படுத்தி மென்பொருள் விருத்தியாக்கும் அனுபவம் இருத்தல் வேண்டும். WCF, MVC 5, Entity Framework, LINQ, Angular, Visual Studio 2015, Team Foundation Server (TFS), NET Core, Python, Big data analysis tools or MS SQL will be an advantage.

3. **அனுபவம்**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களின் தொழிற் தகைமை மற்றும் 02 வருட சேவை அனுபவம் இருப்பின் நேர்முகப் பரீட்சையின் போது விசேட கவனத்தில் கொள்ளப்படும்.

4. **அடிப்படை தகமைகள்**.-

அ. தேசிய இனம் :- ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. குடியியல் நிலை :- விவாகமானவர் /விவாகமாகாதவர்

இ. பால் :- ஆண் /பெண் (தேவையை பொருத்து)

உ. வயது :- 2019, திசெம்பர் 15 ஆந் திகதிக்கு வயது 18-33 வரை இருத்தல் வேண்டும்

ஊ. உயரம் :- ஆண்கள்-167.5 செ. மீ. (5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும்.)
வைத்திய /பல் வைத்திய பிரிவு ஆண்கள்-165 செ. மீ. (5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.)
பெண்கள்- 162.5 செ. மீ. (5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்)
வைத்திய /பல் வைத்திய பிரிவு பெண்கள்- 160 செ. மீ. (5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்)

எ. நிறை :- (ஆண்) 17 < உடற்பருமன் சுட்டி < 26
(பெண்) 17 < உடற்பருமன் சுட்டி < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி . கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

ஏ. மார்பு :- ஆண் 32" (குறைந்தது)

ஐ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

ஒ. தொலைப்பார்வை :-இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) (தொழில்நுட்பம் அல்லாத பிரிவிற்கு மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/18 மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/6 ஆக இருத்தல் வேண்டும்)

5. **விஷேட குறிப்பு**

(1) இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாடைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிலைட் லெப்டினன்ட் அல்லது ப்ளையின் ஒப்பிசர் மற்றும் பைலட் ஒப்பிசர் நிலையில் அலுவலராக அவர்களின் தொழிற் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக வான்படை தளபதியால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் எழுத்து, செயன்முறை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(4) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கை வான்படை மருத்துவ பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

(5) அனைத்துப் பட்டங்களும் டிப்ளோமாக்களும் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்டவையாக இருத்தல் வேண்டும்.

(6) தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(7) விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(8) அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆகப்பெரும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(9) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சி காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்கு விதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(10) இலங்கை வான்படை ஆணை பெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிரல் 27 ஆந் திகதி 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உபசேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற்ஆபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணை பெற்ற பதவி வழங்கப்படும். வான் படைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளின்படி ‘அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்.’) ஆயின், ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான் படைச்சட்டத்தின் 11ஆம் பிரிவின் படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்து கற்கைநெறிகள்

தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டாது. வான் படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள் பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

(11) வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

(12) அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(13) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும் . சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்டும்.

(14) திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15(ஈ) (16) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

**6. சம்பளமும் கொடுப்பனவுகளும்**

அ. தற்போதிலிருந்து 2020 ஆம் வருடத்திற்கான ஏற்புடையதான அடிப்படை சம்பள விகிதங்கள் பின்வருமாறு:- மேற்குறிப்பிட்வாறு இலங்கை வான் படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு - 2018 இல் இருந்து கிடைக்கப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (ஆண்டொன்றுக்கு)

| வருடம் / நிலை | 2019 (வருடத்திற்கு) | திருத்தப் பட்ட கொடுப்ப னவுகள் (வருடத் திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| பைலட் ஒபிசர் (மாணவ நுழைவு) | ரூபா 415,308.00 | - | ரூபா 463,260.00 |
| பைலட்ஒபிசர் (மாணவ அல்லாத நுழைவு) | ரூபா 450,828.00 | - | ரூபா 502,860.00 |
| ப்ளையின் ஓபிசர் | ரூபா 512,148.00 | - | ரூபா 571,380.00 - (30×16020) = 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | ரூபா 598,332.00 | - | ரூபா 667,500.00 - (24×16020) = 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | ரூபா 655,788.00 | - | ரூபா 731,580.00 - (22×16020) = 1,084,020.00 |
| விங்க் கமாண்டர் | ரூபா 673,332.00 | - | ரூபா 751,140.00 - (17×19560) = 1,083,660.00 |

ஆ. வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள கொடுப்பனவு

| வருடம் / நிலை | 2019 (வருடத்திற்கு) | திருத்தப்பட்ட கொடுப்ப னவுகள் (வருடத் திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| ஆரம்ப பிரிவு | ரூபா 583,968.00 | - | ரூபா 651,480.00 (2×16,020-7×16140-2×19,560 - 16×26,040) = ரூபா 1,252,260.00 |
| தரம் II | ரூபா 627,156.00 | - | ரூபா 699,660.00 (6×16140-2×19,560-16×26040) = ரூபா 1,252,260.00 |
| தரம் I | ரூபா 771,756.00 | - | ரூபா 861,660.00 (15×26040) = ரூபா 1,252,260.00 |
| விஷேட பிரிவு | ரூபா 946,536.00 | - | ரூபா 1,056,000.00 (12×32,400) = ரூபா1,444,800.00 |

இ. பல்வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள கொடுப்பனவு

| வருடம் / நிலை | 2019 (வருடத்திற்கு) | | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| தரம் II | ரூபா 569,604.00 | - | ரூபா (3×16,020-7×16,140-2×19,560 - 16×26040) = ரூபா 1,252,260.00 |
| தரம் I | ரூபா 771,756.00 | - | ரூபா 861,660.00(15×26040) = ரூபா 1,252,260.00 |
| விஷேட பிரிவு | ரூபா 946,536.00 | - | ரூபா 1,056,000.00 (12×32400) = ரூபா 1,444,800.00 |

ஈ. வைத்திய, பல்வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள்

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு
ஆரம்ப பிரிவு - ரூபா 1,700.00
தரம் II - ரூபா 1,700.00
தரம் I - ரூபா 3,400.00
விஷேட பிரிவு - ரூபா 3,400.00

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு
ஆரம்ப பிரிவு - ரூபா 2,125.00
தரம் II - ரூபா 1,700.00
தரம் I - ரூபா 400.00

(3) ஓய்வு நேரக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு- ரூபா 35,000.00

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலயத்திற்கு

ஆரம்ப பிரிவு - ரூபா 616.00
தரம் II - ரூபா 714.00
தரம் I - ரூபா 986.00
விஷேட பிரிவு - ரூபா 1,168.00

(5) மொழித்தேர்ச்சி கொடுப்பனவு மாதமொன்றுக்கு
ஆரம்ப பிரிவு - ரூபா 1,347.00
தரம் II - ரூபா 1,356.00
தரம் I - ரூபா 2,096.00
விஷேட பிரிவு - ரூபா 2,572.00

(6) தேவையைபொறுத்து பந்தி 6 (ஈ) இல் உள்ள சேவைக் கொடுப்பனவு வழங்கப்படும்.

உ. சேவைக் கொடுப்பனவுகள்-

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 7,800.00

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி: மாதமொன்றுக்கு 620.00 வீதம். ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 20.00 வீதம்

(4) விஷேட கொடுப்பனவு: யுத்தப்பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00.

(5) விஷேட கொடுப்பனவு: ரூபா 3,100.00 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100.00 வீதம்)

(6) மேலதிக கொடுப்பனவு: மாதமொன்றுக்கு ரூபா 1,000.00.

(7) சீருடை பேணுதல் படி: மாதமொன்றுக்கு ரூபா 255.00.

(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி: மாதமொன்றுக்கு ரூபா 24,005. 47 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 774.37வீதம்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஒபீசர் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600.00 இல் இருந்து 8,500.00 வரை) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(12) தொலைபேசி கொடுப்பனவு மாதாந்தம் விங் கமாண்டர் முதல் எயார் வைஸ் மார்ஷல் 2,500.00 முதல் 5,000.00 வரை

(13) ஆண்டொன்ருக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாண பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்)

(14) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொருதடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு.

(15) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(17) திருமணமான அலுவலருக்கு(வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.போ.ச இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(18) சேவைக் கொடுப்பனவு ரூபா 300.00, ரூபா 400.00, ரூபா 500.00 (பல்வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவை காலத்தை பொறுத்து).

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500.00 (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு - அடிப்படை சம்பளம் × 1/20 × 3 நாட்கள் மட்டும். (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்)

(21) மேலதிக கொடுப்பனவு 120 மணி ஒரு மாதத்திற்கு (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(22) தொலை பேசி கொடுப்பனவு மாதாந்தம் - விஷேட வைத்தியர் ரூபா 8,000.00
வைத்தியர் ரூபா 4,000.00

7. ஓய்வூதியங்கள் /பணிக்கொடுப்னவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள்/ தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள்/ தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

**8. விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் -**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2019,செத்தெம்பர் 04 ஆந் திகதி நன்பகல் 12.00 மணிக்கு முன், "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, பிரதான ஆட்சேர்ப்பு அலுவலகம் "தொழிற்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் .................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்களும் கவனிக்கப்படமாட்டா.

ஆ. அரசாங்கசேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின் /குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகளை நேர்முக பரீட்சையின் போது சமர்பித்தல் வேண்டும் .

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(2) தேசிய ஆள் அடையாள அட்டை மூலப் பிரதி மற்றும் பிரதி

(3) விண்ணப்பித்த துறைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்களின் மூலப் பிரதி மற்றும் பிரதி

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் /தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக்காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்களின் மூலப் பிரதி மற்றும் பிரதி

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் லேஸ்.

(8) வர்ண புகைப்படம் 2×2½ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப்பட்டது.

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

உ. ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. விண்ணப்பத்தில் தரப்பட்ட தகவல்கள் எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவு செய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவுசெய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியலிருந்து நீக்கப்படுவார்.

10. தெரிவு செய்தல் நேர்முகப்பரீசை முதலியன -

அ. மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையை பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவு சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

ஆ. நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவுசெய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

இ. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

உ. ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

ஊ. நிராகரிகப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டி. எல். எஸ். டயஸ்,
RSP and three Bars, VSV, USP, MSc
(Def & Strat Stu), ndc, psc,
எயர் மார்ஷல்,

தலைமையகம்,
வான் படை தளபதி.
இலங்கை வான் படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 02.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசாணைபெற்ற அலுவலருக்கான விண்ணப்பப் படிவம்**
**இலங்கை நிரந்தர /தொண்டர் வான்படையில் . . . . . . . . . பிரிவு**

1. தேசிய இனம்: ....................................................................................................................
   (இலங்கை பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர் (தேசிய ஆள் அடையாள அட்டையில் உள்ளவாறு) :.........................................................................
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:-.................................................................................
4. விண்ணப்பிக்கும் துறை :-...........................................................................
5. விண்ணப்பிக்கும் பிரிவு :-...........................................................................
6. நிரந்தர முகவரி:-..........................................................................................................
7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :- ....................................................................... ..........
8. பாடசாலை பற்றிய விபரங்கள் :-.........................................................................
9. அஞ்சல் முகவரி :-.........................................................................
10. E-Mail முகவரி :-.........................................................................
11. பிறந்த திகதி :- ..........................................................................................................
    (2019 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு வயது) வருடங்கள் ........................ மாதங்கள் ..................... நாட்கள் ...............
12. உயரம் - .............. சென்றி மீட்டரில் .............. (அடி ......................அங்குலம் .................. )
13. மாவட்டம் :..........................................................................................................
14. தேர்தற் தொகுதி :-..........................................................................................................
15. கிராம அலுவலர் பிரிவு:- ..........................................................................................
16. தொலைபேசி இலக்கம்.:- ..........................................................................................
17. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா:- ....................................................
18. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்

| பாடசாலை / பல்கலைக்கழகம் | பரீட்சை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா/த) | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | க.பொ.த (உ/த) | | |
| | | | |
| | | | |
| | | | |
| | தொழில் தகைமைகள் வேறு | | |

19. பாடசாலை /பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் -

22. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் -
    (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

23. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (தேதிகளுடன் விபரத்தையும் தருக.)

24. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை -

25. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது பிணையில் விடப்பட்டீரா? அப்படியாயின், விபரங்களை தருக.

27. இதற்கு முன்னர் அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில், கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம்

28. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பகாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை -

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் எனது அறிவிக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

திகதி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்பதாரரின் கையொப்பம்

08-1018/2

---

## இலங்கை நிரந்தர/தொண்டர் விமானப் படை

### வான் படை வீரர் /வீராங்கணைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/ தொண்டர் வான் படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீரர் / வீராங்கணைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

**அடிப்படை கல்வித் தகைமைகள்**

2. க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

**தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும்**

3. கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு தொழில் துறைக்கும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும்

(அ) வானூர்தி பொறியியல் (ஆண் /பெண்)

(1) வான் அமைப்பு எந்திரவியலாளர் (Aircraft Structural Technician)
(2) வானூர்தி இயந்திரவியலாளர் (Aircraft Engine Technician)
(3) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (Aircraft Electrical and Instrument Technician)
(4) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (Aircraft Safety Equipment Technician)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம். விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தியும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (Aircraft Electrical and Instrument Technician) (இலத்திரனியல் /மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை ஒன்றின் முழுநேர இரண்டு ஆண்டு (இலத்திரனியல்/மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

(ஆ) பொது பொறியியல் (ஆண்)

(1) ஆயுத இயந்திரவியலாளர்
(2) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்
(3) மேற்பரப்பு தொழில்நுட்ப உதவியாளர்
(4) உலோக தகடு இயந்திரவியலாளர்
(5) மரக்கலை இயந்திரவியலாளர்
(6) பொது இயந்திரவியலாளர்
(7) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர்
(8) வான் படப்பிடிப்பாளர்
(9) இரும்பு கடைச்சல் இயந்திரவியலாளர்

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.

(10) மோட்டார் வாகன இயக்குநர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(இ) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்

(1) வான் வானொலி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)
(2) வான் தொலை தொடர்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம். விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் வேண்டும்.

(3) வான் வழி தகவல் பரிமாற்றுதல் (ஆண் /பெண்)
(4) தொலைபேசி இயக்குனர் (ஆண் /பெண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி தொழில்நுட்பவியலாளர்கள் கணினி தொடர்பான அனுபவம் இருத்தல் கணினி தொழில்நுட்பவியலாளர் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஈ) தகவல் தொழில்நுட்ப பொறியியல்

(1) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி தொழில்நுட்பவியலாளர்கள் கணினி தொடர்பான அனுபவம் இருத்தல் கணினி தொழில்நுட்பவியலாளர் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(உ) வைத்தியத் துறை

(1) தாதி உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/கணிதம்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியை பெற விஷேட தகைமையாக கருதப்படும். க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.

| | |
|---|---|
| க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல்/ கணிதம்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | - தாதியர் டிப்ளோமா |
| க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/ இணைந்த கணிதம் அல்லது பௌதீகவியல் / விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். இரசாயனவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - மருந்தாக்கர் / மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் |
| க.பொ.த.(சா.த.)பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் அல்லது உயிரியல் /இணைந்த கணிதம் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - ECG /EET EEG தொழில்நுட்பவியலாளர் |
| க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல்/ உயிரியல் / இணைந்த கணிதம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். பௌதீகவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | - ஒகியுபேஷனல் தெரபிஸ்ட் / X Ray தொழில்நுட்பவியலாளர் பிசியொதெரபிஸ்ட் |
| க.பொ.த.(சா.த.)பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் உட்பட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் அல்லது உயிரியல் /இணைந்த கணிதம் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | வான் படை சுகாதார பரிசோதகர் |

(2) பல் வைத்திய உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம் தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியை பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

(ஊ) பரிபாலன துறை(ஆண் /பெண்)

(1) பரிபாலன உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் சித்தி, உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(2) கணக்கியல் உதவியாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம் /வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணனி அனுபவம் இருத்தல் கணக்கியல் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும்.

(எ) தொழிற்பாடுகள் துறை

(1) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்

(2) தீயணைப்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். கனரக வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் ஆட்சேர்த்தலின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(3) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண் /பெண்)
(4) நாய்கள் கையாளுபவர் (ஆண் )

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(ஏ) உபகரணத் துறை

(1) வழங்குனர் உதவியாளர் (ஆண் /பெண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம் / விஞ்ஞானம் / வர்த்தகமும் கணக்கியலும்

ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விஷேட தகைமையாக கருதப்படும்.

(2) வானூர்தி எரிபொருள் வழங்குனர் (ஆண் )

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம் / விஞ்ஞானம் / வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் வானூர்தி எரிபொருள் வழங்குனர் துறைக்கு விஷேட தகைமையாக கருதப்படும்.

(3) உணவக மேற்பார்வையாளர் (ஆண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(4) போசணசாலை மேற்பார்வையாளர் (ஆண் /பெண்)

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழி சரளமாக பேசும் திறமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும். சுற்றுலா துறையில் அனுமதி பெற்ற ஹொட்டல்களில் பெற்ற அனுபவம் துறைசார்ந்த தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை வழங்கப்படும்

(5) வானூர்தி கடமையாளர் (ஆண் /பெண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழி சரளமாக பேசும் திறமை மற்றும் சிறந்த தோற்ற அமைப்பு கட்டாயம் இருத்தல் வேண்டும். வானூர்தி கடமையாளர் அனுபவம் இருத்தல் வானூர்தி கடமையாளர் துறைக்கு மேலதிக தகைமையாக கருதப்படும். (உயரமானது பாதத்திலிருந்து கைகள் நீட்டினால் செ. மீ 212 ற்கு இருத்தல் வேண்டும்)

(ஐ) பொலிஸ் துறை(ஆண் /பெண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திகள். உயரம் ஆண் 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும். பெண் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முதலிடம் வழங்கப்படும்.

(ஒ) இசைக்கலைஞர் (ஆண் ) /நடனக்கலைஞர் (ஆண் /பெண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள், மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களை இசைக்கும் ஆற்றல் மேலும் சுருதிலயம் இருப்பின் விசேட தகைமையாக கருதப்படும். சங்கீதம், பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக அறிவிப்பாளராக இருத்தல் போன்றவை விஷேட தகைமையாகும்.

(ஓ) உடற் பயிற்சியாளர் (ஆண்)

க.பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் தேசிய மட்டத்தில் மெய்வல்லுனர் விளையாட்டு தொடர்பான தகைமை விஷேட கவனத்தில் கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறை பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.

இலங்கை விமானப் படை நிரந்தர வீரர் / வீராங்கணைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

**4. தொழிற்துறையும் தேவைப்படும் கல்வித்தகைமை மற்றும் தொழிற்தகைமையும்**

(அ) பொது பொறியியல் (ஆண்)

(1) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்

க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்கள் தொண்டர் வான் படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர் பிரிவு (ஆண்)

(1) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர்
(2) தொலைபேசி இயந்திரவியலாளர்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம். விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிற்துறைமற்றும்தொழில்நுட்பபயிற்சிஅமைச்சின்மூலமாகஅங்கீகரிக்கப்பட்டபாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு/இலத்திரனியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு /இலத்திரனியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

கணினி தொடர்பான முழுநேர ஆறு மாத கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும் வலையமைப்பு/ மென்பொருள் விருத்தி/ வன் பொருள் மற்றும் மென்பொருள் புதுப்பித்தல் தொடர்பாக 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

கணினி தொடர்பான முழுநேர ஒரு வருட கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும் வலையமைப்பு/ மென்பொருள் விருத்தி/ வன் பொருள் மற்றும் மென்பொருள் புதுப்பித்தல் தொடர்பாக 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஈ) சிவில் பொறியியல் துறை ( ஆண் )

(1) மின்சார வேலையாளர்
(2) இயந்திர தொழில்நுட்பவியலாளர்
(3) கட்டுமான உபகரண இயந்திரவியலாளர்
(4) வளி சீராக்கி தொழில்நுட்பவியலாளர்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தியுடன் இரண்டு திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

தேசிய தொழிற்துறை தகுதி மட்டத்தில் 4 (NVQ Level 4) அல்லது அரசு மூலமாக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை பாடசாலை ஒன்றின் மூலமாக ஆறு மாத கால பயிற்சியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.மேலும் குறிப்பிட்ட துறையில் 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(5) காய்ச்சி பொருத்தும் உதவியாளர் ( ஆண் )

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் , மொழியில் சித்தியுடன் இரண்டு திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

தேசிய தொழிற்துறை தகுதி மட்டத்தில் 4 (NVQ Level 4) அல்லது அரசு மூலமாக அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை பாடசாலை ஒன்றின் மூலமாக ஆறு மாத கால பயிற்சியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.மேலும் குறிப்பிட்ட தொழில்நுட்ப முறையில் தொலைத்தொடர்பு கோபுரங்களை பேணுதல் மற்றும் சீர் செய்தல் தொடர்பாக 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(உ) முன்பள்ளி ஆசிரியர் ( பெண் )

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். அரசு மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் மூலமாக முன்பள்ளி ஆசிரியராக 2 வருட கால பயிற்சியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஆங்கிலம் சரளமாக பேசுதல் மற்றும் கலைச் செயற்பாடுகள் (பாடுதல், இசைக்கருவி இசைத்தல் மற்றும் நடனம் ஆடுதல்) அனுபவம் மேலதிக தகைமையாகும்.

இலங்கை விமானப் படை தொண்டர் வீரர் / வீராங்கணைகளுக்கான ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

**5. தொழிற்துறையும் தேவைப்படும் கல்வித்தகைமை மற்றும் தொழிற்தகைமையும்**

(அ) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர் பிரிவு(ஆண்)

(1) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர்
(2) தொலைபேசி இயந்திரவியலாளர்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம். விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி இருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு /இலத்திரனியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு /இலத்திரனியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) உடற் பயிற்சியாளர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் , ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி உட்பட உடற் பயிற்சி நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறை பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும். உடற் பயிற்சி இயந்திரம் சீர் செய்தல், பேணுதல் போன்ற துறையில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(இ) இரசாயன தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் /இரசாயனவியல் /பௌதிகவியல் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

இரசாயன தொழில்நுட்பவியலாளர் தொடர்பாக டிப்ளோமா இருத்தல் அல்லது Surface Treatment அதற்கு சமனான தகைமையுடன் 02 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் .

**6. ஏனைய தகைமைகள்:-**

இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) குடியியல் நிலை :- நிரந்தர திருமணமாகாதவர்

தொண்டர் மற்றும் நேரடி ஆட்சேர்ப்பு திருமணமாகாதவர் /திருமணமானவர்

(3) வயது :- 2019, திசெம்பர் 15 ஆந் திகதியன்று
**நிரந்தர**

ஆண் -18 -23 வயது இருத்தல் வேண்டும்.
பெண் -18 -22 வயது இருத்தல் வேண்டும்.

**தொண்டர்**
ஆண் -18 -30 வயது இருத்தல் வேண்டும்.
பெண் -18 -28 வயது இருத்தல் வேண்டும்.

**நேரடி ஆட்சேர்ப்பு**
ஆண் -18 -28 வயது இருத்தல் வேண்டும்.
பெண் -18 -26 வயது இருத்தல் வேண்டும்.

(4) உயரம் :- ஆண் - 5 அடி 5 அங்குலமும் (165 cm) அதற்கு மேலும்.
பெண் - 5 அடி 3 அங்குலமும் (160 cm) அதற்கு மேலும்

(5) உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற் பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி)}}{\text{உயரம் (மீ)}^2}$$

(6) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(7) மார்பு :- குறைந்தது 32 அங்குலம் (ஆண்)

(8) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) தொண்டர் / நேரடி ஆட்சேர்ப்பு பிரிவுக்கு மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/18 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/6 இருத்தல் வேண்டும்)

(9) **குடியியல் நிலை :-**

(அ) நிறந்தர வான் படை வீரர் /நிறந்தர வான் படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.(வான் படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(ஆ) தொண்டர் வான் படை வீரர் /தொண்டர் வான் படை வீராங்கனைகள், நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் வான் படை வீரர் / வான் படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். தமது அடிப்படை பயிற்சியை முடித்த பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(இ) தொண்டர் வான் படை வீரர் /தொண்டர் வான் படை வீராங்கனைகள், நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் வான் படை வீரர் / வான் படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.தமது அடிப்படை பயிற்சியை முடித்த பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(ஈ) பூமி தொழிற்பாட்டாளர் பிரிவில் உள்ள வான் படை வீராங்கனைகள் இணைந்து தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து 4 ஆண்டுகள் கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(உ) நடன பிரிவில் உள்ள வான் படை வீராங்கனைகள் வான் படை வீராங்கனைகள் இணைந்து தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

7. பந்தி 2, 3, 4, 5 மற்றும் 6 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித்திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

8. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

9. **சேவை நிபந்தனைகள்.-**

அ. தெரிவு செய்யப்படும் தொழில் துறைக்குறிய நிரந்தர வான்படை வீரர் / நிரந்தர வீராங்கணைகள் அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சி வழங்கப்படுவதுடன் , வான் படை வீரர்கள் அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/ தொண்டர்) சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

ஆ. வான்படை வீரர்/வீராங்கணைகளகள் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ வான்படை வீரர் /வீராங்கணைகளாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ ஒவ்வொரு வான்படை வீரர் /வீராங்கணைக்கும் அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. வான்படை வீரர் /வீராங்கணைகள் பயிற்சி காலத்தின்போது வான்படை வீரர் /வீராங்கணைகள் வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு வான்படை வீரர் /வீராங்கணைகள் பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய வான்படை வீரர் /வீராங்கணை பொருட்டு அதுகாலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு வான்படை வீரர்/வீராங்கணை தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும் படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ , எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 28 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் வான்படை வீரர் /வீராங்கணை நியமிக்கப்படு வதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுவதுடன் சித்தி பெறும் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவர்/அவர்கள் இந்த நேர்முகப்பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத வான்படை வீரர்/ வீராங்கணைகள் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப் படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத வான்படை வீரர் /வீராங்கணையின் உணவுப்படி உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

ஓ. திருமணமாகிய வான்படை வீரர் /வீராங்கணை (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

ஔ. எல்லா வான்படை வீரர் /வீராங்கணை உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஅ. எல்லா வான்படை வீரர் /வீராங்கணை வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

10. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.**

அ. நிரந்தர வான்படை வீரர் /நிநந்தர வீராங்கணைகள் தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும்.அதில் தொடர்ச்சியாக 08 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 08 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 04 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும் போது சமூகமளிக்க வேண்டும். 08 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆ. தொண்டர் வான்படை வீரர் /தொண்டர் வீராங்கணை தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 05 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 05 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

11. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.-** தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆகப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

12. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.-**

அ. தற்போதிலிருந்து 2020 வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படை சம்பள விகிதங்கள் பின்வருமாறு மேற்குறிப்பிட்டவாறு இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு 2016 இல் இருந்து கிடைக்கப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (ஆண்டொன்றுக்கு)

| வருடம் / நிலை | 2016 (வருடத்திற் கான) ரூபா | 2017 (வருடத்திற் கான) ரூபா | 2018 (வருடத்திற் கான) ரூபா | 2019 (வருடத்திற் கான) ரூபா | 2020 (வருடத்திற்கான) ரூபா |
|---|---|---|---|---|---|
| விமான வீரன் | 207,984.00 | 244,608.00 | 281,232.00 | 317,856.00 | 354,480.00 (7×3,600-19×4,440) |
| முன்னணி விமான வீரன் | 214,320.00 | 252,060.00 | 289,800.00 | 327,540.00 | 365,280.00 (4×3,600-19×4,440) |
| கோப்ரல் | 220,656.00 | 259,512.00 | 298,368.00 | 337,224.00 | 376,080.00 (1×3,600-10×4,440-9×5,940) |
| சார்ஜன்ட் | 227,808.00 | 267,996.00 | 308,184.00 | 348,372.00 | 388,560.00 (3×4,440-9×5,940-3×7,920) |
| பிளைட் சார்ஜன்ட் | 232,848.00 | 237,996.00 | 315,144.00 | 356,292.00 | 397,440.00 (1×4,440-9×5,940-3×7,920) |
| அதிகாரம் பெற்ற அலுவலர் | 242,352.00 | 285,204.00 | 328,056.00 | 370,908.00 | 413,760.00 (7×5,940-14×7,920) |
| பிரதான அதிகாரம் பெற்ற அலுவலர் | 271,452.00 | 319,404.00 | 367,356.00 | 415,308.00 | 463,260.00 (13×7,920) |

ஆ ஓய்வூதியங்கள் /பணிக்கொடுப்னவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்கோவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுத்தொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

13. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்துதல்கள்**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2019, செத்தெம்பர் 04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சி பாடசாலை கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.(பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விமானப்படை வான்படை நிரந்தர/தொண்டர் வீரர் /வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவு திகதியின் பின்னர் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

ஆ. அரசாங்கசேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல்தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின் /குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(2) தேசிய ஆள் அடையாள அட்டையின் மூலப் பிரதி மற்றும் பிரதி

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழின். மூலப் பிரதி மற்றும் பிரதி.

(4) ஆங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் /அல்லது அனுபவச் சான்றிதழின் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி.

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்களின் மூலப் பிரதி மற்றும் பிரதி.

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் லேஸ்.

(8) வர்ண புகைப்படம் $2 \times 2\frac{1}{2}$ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப்பட்டது.

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

உ. ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

14. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

15. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆள் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய ஆள் அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

16. தங்கள் இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

17. பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

18.விண்ணப்பதாரரொருவருக்குவிதப்புரைவழங்கவிரும்பும்எவரும்நற்சாட்சிப்பத்திரமொன்றைவழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

19. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல் எதுவும் பிழையாகக் காணப்படுமிடத்து தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

20. நேர்முகப்பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டி. எல். எஸ். டயஸ்,
RSP and three Bars, VSV, USP, MSc
(Def & Strat Stu), ndc, psc,
எயர் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படையில்.................பிரிவில் ஆண் /பெண் வான்படை வீரர் /வீராங்கணைக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம்: ..................................................................
(இலங்கை பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர்(தேசிய ஆள் அடையாள அட்டையின்படி) :..................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-..................................................................
4. நிரந்தர முகவரி:-..................................................................
...............
5. தற்போதைய அஞ்சல் முகவரி :- ..................................................................
6. பிறந்த தேதி :- ..................................................................
வயது :- (2019, திசெம்பர் 15 ஆந் திகதிக்கு) வருடங்கள் . . . .. மாதங்கள். . . நாட்கள் . . .
7. உயரம் - .............. செ. மீ. (.............. அடி ......................அங்குலம்)
8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்-..................................................................
9. மாவட்டம்:-..................................................................
...............
10. தேர்தற் தொகுதி :-..................................................................
11. கிராம அலுவலர் பிரிவு:- ..................................................................
12. தொலைபேசி இலக்கம்.:- ..................................................................
13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா:- ..................................................................
14. பால்.:- ..................................................................
15. பாடசாலை பற்றிய விபரங்கள் .................................................................. ..............................
16. பாடசாலை அத்துடன் /அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்-

| பாடசாலை /சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உற்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த (சா/த)<br>க.பொ.த (உ/த)<br>வேறு | | |

17. பாடசாலை /பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் -

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் -
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.)

22. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை-

23. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதெனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக. -25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் . கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட ) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம்

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை -

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் எனது அறிவிக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப உண்மையானவை சரியானவை உறுதிப்படுத்துகிறேன் . இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

............... ......................................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

28. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை -

அ. இலங்கைவான்படையில்பயிலுனராகவிண்ணப்பித்துமேலேகொடுக்கப்படும்விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்பவரது பெற்றோர் /பாதுகாவலர் நான், ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொருப்பாளியாவேன் -

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் .

.......................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

திகதி :- ..........................................................................................
பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) :-..........................................
முகவரி :-........................................................................................

.......................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

திகதி :- ..........................................................................................
பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) :-..........................................
முகவரி :-........................................................................................

.......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி :- ..........................................................................................
பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) :-..........................................
முகவரி :-........................................................................................

8-1018/3

**திருத்தம்**

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர்களின் சேவையின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக சுகாதார பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2019

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.05.17 ஆந் திகதிய 2124 ஆம் இலக்கம் வர்த்தமானி அறிவித்தலின் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட 05-501 அறிவிப்பின் திருத்தமாகும்.

01. சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2019.08.31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

| குறியீட்டு இலக்கம் | வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய பட்டம் |
| --- | --- | --- |
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | மருத்துவ இரசாயனவியலாளர் (B. Sc. MLS) |
| 2. | மருந்தாளர் | மருந்தாளர் (B. Phram)<br>விஞ்ஞானமானி (மருந்தாளர்) விஷேட (B. Sc. Pharmacy) ) |
| 3. | பௌதீக சிகிச்சையாளர் | பௌதீக சிகிச்சையாளர் (B. Sc. Physiotherapy) |
| 4. | கதிரியலாளர் | கதிரியல் சிகிச்சையாளர் (B. Sc. Radiotherapy)<br>கதிரியல் விஞ்ஞானமாணி (B. Sc. Radiography) |

இவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிறிபாய',
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2019, ஓகத்து 05.

08-845

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## ஆய விற்பனையும் குத்தகையும்

**மொணறாகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2020**

பல்லே வரதொல இலக்கம் 01

மேற் குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கள்ளுத் தவறணையை 2020, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2020, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்கு வதற்கு 1982, ஓகத்து மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 இல் பிரசுரிக்கப்பட்டதும நடைமுறையிலுள்ள பொது விதிமுறைகளுக்கு அமைவாகவும், கீழ்க் குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் 2019, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2019, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி கேள்விப்பத்திரங்கள் விற்க முடியாவிடின் 2019, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்தப் பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளக் கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாக தயாரித்து கீழ்க் குறிப்பிட்ட நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்கான பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடது மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரும், இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப் பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்விப் பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் "பெயருக்கு பதிவுத் தபாலில்" அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப் பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்களில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரக்காரர்கள் தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் விற்கப்படும் தினமான 2019, ஓகத்து மாதம் 30ஆந் திகதி கேள்விப்பத்திரகாரர்கள் சமுகளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்குவது 2019, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணியுடன் முடிவடையும்.

எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர்கள் "எவர்" என அறிந்தவுடன் அன்றைய தினத்தில் மு.ப. 2.00 மணிக்கு முன்பாக அக் கேள்விப்பத்திரக்காரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்குக் குறைவானதான கணிக்கப்படும் தொகையை பிணைப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்தோடு "குத்தகை நிபந்தனையில்" கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் படல்கும்புர பிரதேச செயலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

என்.ஜீ. எம்.எஸ். குமார,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர,

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2019, ஓகத்து 06.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரமும் மூடும் நேரமும் | வைப்புத் தொகை | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1. | மொணறாகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லே வராதொல கமேவெல | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 4.00 முதல் பி. ப. 8.00 மணி வரை | ரூபா 500.00 | 2019.08.30 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை |

8 - 949

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**எகஸ் லங்கா டுவர்ஸ் ( பிறைவட்) லிமிடட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ்க் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : எகஸ் லங்கா டுவர்ஸ் ( பிறைவட் ) லிமிடட்
கம்பனி பதியப்பட்ட திகதி: 2019, யூலை 31
கம்பனி பதியப்பட்ட இலக்கம் : பீவீ 00214098
கம்பனி பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 60, முதலாம் ஒழுங்கை, கம்மனா வீதி, மஹரகம

பணிப்பாளர்.

8- 768

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : நெதுன் குரோவ் கித்துல்கல ( பீவீஸ) எல்டீடி
பதிவிலக்கம் : பீவீ 00211560
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.05.08
பதிவு முகவரி : இலக்கம் 43/1, சுமனாராம வீதி, கொஹுவல

கம்பனிச் செயலாளர்.

8- 770/1

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : த கே-நைன் குரூப் ( பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00202561
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.07.30
பதிவு முகவரி : இலக்கம் 86, நாவல வீதி, நுகேகொட

கம்பனிச் செயலாளர்.

8- 770/2

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , கீழ்க் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : கட்டான ரிஃபைனெரீஸ் ( பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00212089

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.05.28
பதிவு முகவரி : இலக்கம் 200/பீ, படபத்தல சந்தி, கடான

கம்பனிச் செயலாளர்.

8- 770/3

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ்க் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : பயோசெர்ட் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00202855
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.08.06
பதிவு முகவரி : இலக்கம் 78/9ஈ, விக்ரமசிங்ஹபுர, பத்தரமுல்ல

கம்பனிச் செயலாளர்.

8- 770/4

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், 2019, யூலை மாதம் 11 ஆந் திகதி கீழ்க் குறிப்பிட்ட பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : ட்ரசிபைட் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 002135086
பதிவு அலுவலகம் : இல. 65, வாலுக்காராம வீதி, கொழும்பு 3

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

03 ஆம் மாடி,
இல. 11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

8- 771

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : யூனியன் கன்வீனியன்ஸ் ( பிறைவட் ) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00213663
பதிவு முகவரி : இல. 297, டொக்டர் கொல்வின் ஆர் டீ சில்வா மாவத்தை,
கொழும்பு 2

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்,
செயலாளர்கள்,
யூனியன் கன்வீனியன்ஸ் (பிறைவட்) லிமிடட்.

8- 811

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழக் குறிப்பிட்ட பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : பெஸ்ட் டுவர் ஹொலிடேஸ் (பிரைவட் ) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00214292
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.08.05
பதிவு முகவரி : இலக்கம் 47-5/3, ஈ.எஸ். பெர்னாண்டோ மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு 6

கம்பனிச் செயலாளர்.

8- 837

---

**வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொதுஅறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.-

கம்பனியின் பெயர் : துங்கண்ணாவ சோலார் ( பீவீடி ) எல்டீடி
கம்பனியின் இலக்கம் : பீவீ 00214065
கூட்டிணைப்புத் திகதி : 2019, யூலை 30
கம்பனியின் பதிவு முகவரி : 9/2, மெயிட்லண்ட் கிறசென்ட், கொழும்பு 7

துங்கண்ணாவ சோலார் ( பீவீடீ) எல்டீடி என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யூ. கோப்பறேட் செக்ரட்டேரியல் ( பீவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2019, ஓகத்து 1.

8- 862

---

**வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொதுஅறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.-

கம்பனியின் பெயர் : சிங்க கெப்பிட்டல் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீபீ 00214009
கூட்டிணைப்புத் திகதி : 2019, யூலை 27
கம்பனியின் பதிவு முகவரி : இல. 150, ஹிரிம்புர வீதி, காலி

சிங்க கெப்பிட்டல் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யூ. கோப்பறேட் செக்ரட்டேரியல் ( பீவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2019, யூலை 30.

8- 863

---

**வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொதுஅறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.-

கம்பனியின் பெயர் : எச்.எம். ரினீவபல் ( பீவீடி ) எல்டீடி
கம்பனியின் இலக்கம் : பீவீ 00214079
கூட்டிணைப்புத் திகதி : 2019, யூலை 30
கம்பனியின் பதிவு முகவரி : 9/2, மெயிட்லண்ட் கிறசென்ட், கொழும்பு 7

எச்.எம். ரினீவபல் ( பீவீடி ) எல்டீடி என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யூ. கோப்பறேட் செக்ரட்டேரியல் ( பீவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2019, ஓகத்து 1.

8- 864

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பத்தரமுல்ல, தலங்கம வடக்கு, கொஸ்வத்த, இலக்கம் 210/3 இல் வதியும் விதானகே விஜித பத்மினி பெரேரா (கடவுச் சீட்டு இலக்கம் என் 7224048) ஆகிய என்னால் 2001.11.30 ஆந் திகதியுடைய கொல்வின் ஜயசிங்ஹ எல்எல்பி அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு தலங்கம, கொஸ்வத்த, இலக்கம் 210 இல் வதியும் விதானகே உபாலி ஆரியரத்ன பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் இரத்துச் செய்து இல்லா தொழிக்கப்பட்டுள்ளதெனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன் என்பதுடன் இது முதற்கொண்டு கூறப்பட்ட விதானகே உபாலி ஆரியரத்ன பெரேரா என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பாக இருக்கப்போவதில்லை எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

விதானகே விஜித பத்மினி பெரேரா.

8-760

---

**விஷேட பங்காண்மை அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (உள்நாடு)**

இதனால் சகலருமறிக, மட்டக்களப்பு, ஏறாவூர் 03, பிரதான வீதி, இல. 79 இல் வசிக்கும் நஸீஹா ஹாட்வெயார் மற்றும் கன்ஸ்ட்ரக்ஷன் பங்காளர் மரைக்கார் முகம்மது சாலி ( தே.அ.அ.இல. 471342599V) மற்றும் மட்டக்களப்பு , ஏறாவூர் பற்று - 03, பிரதான வீதி, இல. 79 இல் வசிக்கும் நஸீஹா ஹாட்வெயார் மற்றும் கன்ஸ்ட்ரக்ஷன் பங்காளர் சுபைதா முகம்மது சாலி (தே.அ.அ.இல. 586573365V) ஆகிய நாங்கள் எங்களது சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 432 ஆம் இலக்க 2017.10.11 ஆந் திகதியன்றைய பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமாகிய முகம்மது இப்றாகிம் லெப்பை முகம்மது பழீல் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2017.10.12 ஆந் திகதியன்று பதிவாளர் நாயகம், பத்தரமுல்ல Serial இல. 213, Folio இல. 58, Volume இல. 16036 இல் பதியப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவமானது எங்களது சார்பில் எங்களது நஸீஹா ஹாட்வெயார் மற்றும் கன்ஸ்ட்ரக்ஷன் தொடர்பான கட்ன்ட்ரக்ஷன் வேலைகளையும் அது தொடர்பான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் பெறுவதற்கும் அதன் பங்காளரான மட்டக்களப்பு, ஏறாவூர் -03, பிரதான வீதி, இல. 79 இல் வசிக்கும் திரு. முகம்மது சாலி நளீம் (தே.அ.அ.இல. 762970023V) என்பவர் சட்டபூர்வ அற்றோணியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆகவே, நாங்கள் எங்களது சுய நினைவுடன் தெரிவிப்பதாவது, மேற்கூறப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்வதுடன் அவ் விஷேட அற்றோணித்தத்துவப் பத்திரத்தில் திரு. முகம்மது சாலி நளீம் என்பவருக்கு எங்களால் வழங்கப்பட்ட அதிகாரங்களை முடிவுறுத்திக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 05 ஆந் திகதியாகிய இன்று எங்களது வழமையான கையொப்பத்தை இடுகின்றோம்.

மரைக்கார் முகம்மது சாலி ,
சுபைதா முகம்மது சாலி.

8-766

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் , சுலானை , சுன்னாகம் என்ற முகவரியில் வாழ்ந்துவரும் தற்பொழுது இல. 21, Horsham Road, west Green Carwley, United Kingdom என்ற முகவரியில் வசிக்கும் சிவலிங்கம் சுசிலாதேவி ஆகிய நான், ஐக்கிய இராச்சிய சொலிசிட்டர் திரு. ஆர். தவராஜா என்பவரினால் 2000. 03.07 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவமானது 2019. 08.25 ஆந் திகதி முதல் செயல்வலும் பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட வேண்டுமென்பதுடன் , மேற்படி அற்றோணி அதிகாரம் பெற்ற குருநாகல் மாவட்ட, புஹூரியா வீதி, பொல்கஹவெல என்ற முகவரியில் வசிக்கும் ஜேமிஸ் விஜேபால (582382840V) என்பவரினால் இத்தினத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் எவ்விதமான நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியில்லை எனவும் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றென்.

சிவலிங்கம் சுசிலாதேவி .

8-783

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

தொடங்கொட, ஆரச்சிகொட எனும் இடத்தில் வசிக்கும் தனூஜ பிரபாத் எதிரிசிங்க ஆகிய எனக்கு, பிரசித்த நொத்தாரிசு கே. டீ. பீ. இஷாரா லக்மியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வகவத் ஆரச்சிகே அசங்க பிரேமசந்திர என்பவரினால் அளிக்கப்பட்ட பத்தரமுல்ல, பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் இலக்கம் 260 ஆம் காண்டத்தில் 14 ஆம் ஏட்டு ஓலையில் , 22450 ஆம் இலக்க நாட்குறிப்பேட்டின் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ள 2018. 11.28 ஆந் திகதிய 156 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் செல்லுபடியற்றதாக்கினேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

தனூஜ பிரபாத் எதிரிசிங்க .

8- 805

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிலியந்தலை, கெஸ்பேவ, ஹொரண வீதி, இலக்கம் 107 எனும் முகவரியில் வசித்தவரும் தற்போது ஐக்கிய அமெரிக்காவில் இலக்கம் 27 , எஸ் ஸ்வன்விக் இடம், வூட்லன்ட்ஸ் டீஎக்ஸ் 77375 எனும் முகவரியில் குடியிருக்கும் நிஷான் தர்ஷன ஆதிஹெட்டி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிலியந்தலை, கெஸ்பேவ, ஹொரண வீதி, இலக்கம் 107 எனும் முகவரியில் வசிக்கும் நாஒடுன்ன பள்ளியகுருகே பத்மா மனோரமா ஆதிஹெட்டி என்பவருக்கு ஐக்கிய அமெரிக்க டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த அலைஸ் பராஸ் எனும் பிரசித்த நொத்தாரிசினால் 2017. 10.02 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது எனவும் இதன் பின்னர் அற்றோணித் தத்துவகாரரால் என் சார்பில் செயற்படும் எந்த ஒரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புதாரி அல்ல என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிஷான் தர்ஷன ஆதிஹெட்டி.

8- 829

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

ஆரச்சிக்கட்டுவை, மேற்கு ஆரச்சிக்கட்டுவை, லஸ்ஸன வத்த, 13 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பொல்பிடி ஆசாரிலாகே நிரோஷனி நிர்மலா அல்லது வர்ணகுலசூரிய நிர்மலா நிரோஷனி பர்னாந்து (தேசிய அடையாள அட்டை இல. 766363512V) ஆகிய நான், என்னால் ஆரச்சிக்கட்டுவை, மேற்கு

ஆரச்சிக்கட்டுவை , லஸ்ஸன வத்த, 13 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பொல்பிடி ஆசாரிகே ஐராங்கனி ( தேசிய அடையாள அட்டை இல. 566613409 V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய சீ. சிரிமெவன் விஜேசேகர முகதாவில் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதியன்று நிறைவேற்றப்பட்டதுமான 10291 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித்தத்துவப் பத்திரத்தை அழித்து வெற்றும் வெறிதுமாக்கி இரத்துச் செய்துவிட்டேன் என்று இதன் பின்பு எனது சார்பில் குறித்த பொல்பிடி ஆசாரியே ஐராங்கனி என்பவருடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பல்ல என்றும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பொல்பிடி ஆசாரிலாகே நிரோஷனி நிர்மலா
அல்லது
வர்ணகுலசூரிய நிர்மலா நிரோஷனி பர்னாந்து.

8- 976

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

யக்கல , சியண உயன, 36 ஏ2/ 01 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த இரத்நாயக்க முதியன்செலாகே அனோஜா சுபாஷினி ஆகிய நான், ( தே.அ.அ.இல. 806672645V) 2012, பெப்புருவரி 22 ஆம் திகதியிடப்பட்டு 1848 என்ற இலக்கத்தையுடையதும் பிரசித்த நொத்தாரிசு ஐ.ஐ.ஆர்.வேரகொட என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு யக்கல, சியண உயண 36, ஏ2/01 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உல்பத்த கெதெர அனோமா சுதர்ஷனி (தே.அ.அ.இல. 757291150V) என்பவருக்கு மேலேயுள்ள முகவரியிலுள்ள என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் இதனகத்துப் பின்னர் இத்தத்துவமானது வெற்றும் வெறிதாக்கப்பட்டுள்ளதெனவும் அறியத்தருகின்றேன்.

ஆர். எம். ஏ. சுபாஷினி.

8- 1027

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

நுகேகொட, பெலவத்த வீதி, இல. 42/1A எனும் முகவரியில் வசிக்கும் ஹொல்லுபதிரகே அசினி மதுவந்தி கள்தேரா அகிய என்னால் நுகேகொட, பெலவத்த வீதி, இல. 42/ 1 எனும் முகவரியில் வசிக்கும் மஹிந்த ரூபசிங்க என்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ரீ. எஸ். அமரசிறி என்பவரால் எழுதி வழங்கப்பட்ட இல. 654 மறறும் 2018.08.06 ஆந் திகதிய விசேட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இன்று முதல் மேற்படி அற்றோணிதாரரால் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

ஹொல்லுபதிரகே அசினி மதுவந்தி கள்தேரா

8- 1087

# ஏலவிற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

பெனசியா ரேஸ்ட்டொரண்ட்
கணக்கு இல.: 0047 1000 1311

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.01.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.03.15ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.03.15 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே தொண்ணூற்றி ஐந்து இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்றி இருபத்தி ஆறு ரூபா எண்பது சதம் (ரூபா 1,95,08,826.80) 2018, திசெம்பர் 08 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எண்பது இலட்சத்து முப்பத்தேழாயிரத்து தொளாயிரத்து எண்பத்தெட்டு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூபா 1,80,37,988.55) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் நான்கு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து நூற்று எண்பத்தி இரண்டு ரூபா பத்து சதம் (ரூபா 4,24,182.10) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) மேலும் மூன்று இலட்சத்து அறுபத்தோராயிரம் ரூபா (ரூபா 3,61,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஐந்து வீதம் (10.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நில மனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரரான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக 2019. 09.11 ஆந் திகதி பி.ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை பல்லே பத்துவின் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பன்னிப்பிட்டிய தெற்கு - 531A கிராம அலுவலர் பிரிவின் பன்னிப்பிட்டியவில் அமைந்த ஹைலெவல் வீதி, வரிமதிப்பீட்டு இல. 496A - 1/1 ஐ ஏற்ற "வல்ஜம்பு காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, சனவரி 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 7337 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 2584 எனும் வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : இல. 7336 எனும் வரைபடத்தின் லொட் 2B2 ; தெற்கு : ஹைலெவல் வீதி மற்றும் மேற்கு : 4 அடி அகல ஒற்றையடிப் பாதை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் கூறப்பட்ட இல. 7337 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 398/ 101 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் A கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் ஒன்றிணைப்பும் மற்றும் மீள் அளவீடுமாகும்.

கூறப்பட்ட பன்னிப்பிட்டியவில் அமைந்த "வல்ஜம்புகாஹா வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, சனவரி 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 7336 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2B1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 2584 எனும் வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : லொட் 2B2 ; தெற்கு : ஹைலெவல் வீதி ; மற்றும் மேற்கு: இல. 10488 எனும் வரைபடத்தின் லொட் 2A ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 128/103 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட பன்னிப்பிட்டியவில் அமைந்த "வல்ஜம்புகாஹா வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, பெப்புருவரி 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 10488 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 2584 எனும் வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : இங்கு லொட் 2B ; தெற்கு : ஹைலெவல் வீதி மற்றும் மேற்கு : நவரத்ன என்பவரின் காணியின் 4 அடி அகல ஒற்றையடிப்பாதை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 84/51 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

8- 913

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

எஸ். எம். கே. ஜீ. பீ. எம். சமரகோன் மற்றும் எஸ். எம். கே. ஜீ. ஏ. எஸ். சமரகோன்
கணக்கு இல.: 1085 5460 6048

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.09ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.07.26 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்துமூன்று இலட்சத்து இருபத்து மூவாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்து ரூபா நாற்பத்திரெண்டு சதம் (ரூபா 83,23,249.42) 2019, மே 02 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபது இலட்சம் ரூபா (ரூபா 60,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு சதவீதம் (16%) மேலும் பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்றாயிரத்து அறுநூறு ரூபா (ரூபா 18,96,600.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1413 மற்றும் 2712 மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நில மனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2019. 09.20 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், வெதிரட்ட கோரலே பாத்த தும்பர பாலிஸ்பத்து மேற்கின் குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைகளுக்குள் கோனவல தெற்கு கிராம அலுவலர் பிரிவின் கோனவல கிராமத்தில் அமைந்த "வெலிகொடபிட்டியே தேவாலெகாவஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. ரூப்பசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஓகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட இல. KR 897 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : வீதி; தெற்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 5; மேற்கு : மற்றும் வடமேற்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 4 மற்றும் வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு தசம் இரண்டு ஒன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 12.217பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. KR 897 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 128/3 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ரூப்பசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஓகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட இல. KR 897 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 4 இன் மீதும் அதன் ஊடாகவும் அதன் மீது கீழும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது மற்றும் வரைபடத்தில் லொட் 3 எனக் காட்டப்பட்ட வடிகாலமைப்பு உபயோகிக்கும் உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-914/1

---

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**குறிப்பு.**- மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரமாகும் மேலதிக அறிவித்தல்களை தயவுசெய்து 2019.08.23 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

# பகுதி I : தொகுதி (I) - பொது

**குறிப்பு.**- மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரமாகும் சகலஅறிவித்தல்களையும் தயவுசெய்து 2019.08.23 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk